Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# ஐராவதீஸ்வரர் கோயிலின் சிற்ப நுட்பங்கள்

**திருமதி. க.கனிமொழி**
**உதவிப் பேராசிரியர், பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையம்,**
**கிண்டி வளாகம், சென்னை- 25.**
nattramizh12@gmail.com

90

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் பண்பாட்டு வளர்ச்சியை மிகுதியாகக் கோயில்கள் பிரதிபலிக்கின்றன. நாகரிக வளர்ச்சியின் சிறப்பம்சங்கள் முழுவதும் கோயிலைச் சுற்றியே இயங்கி வந்தன. இந்நாகரிக வளர்ச்சி படிநிலைகள் கலைகளாக உருவாக்கம் பெற்றன. முடியுடை மூவேந்தராலும் இக்கலைகள் செழித்தோங்கின. இவருள் சோழராட்சியின் மாண்பையும் அவர்காலத்தில் நிலவிய சிற்பக்கலையின் சிறப்பையும் எடுத்து இயம்ப தாராசுரம் என்னும் இடத்திலமைந்த ஐராவதீஸ்வரர் கோயிலின் சிறப்பையும் அக்கோயிலில் அமைந்துள்ள சிற்பத்தின் நுட்பங்களையும் இக்கட்டுரை பேசுகிறது. சோழர்களின் பெருங்கோயில்களில் தாராசுரத்திலமைந்த இக்கோயில் தனிச் சிறப்புடையதாய்த் திகழ்வதற்கு அக்கோயிலில் காணப்படும் சிற்பங்கள் முக்கியக் காரணியாக அமைகின்றன. கம்போடியா, கொனார்க் போன்ற கோயில்களின் சிற்பங்கள் எப்படி உலகப்புகழ் உடையனவாகத் திகழ்கின்றனவோ அதுபோல நம் தமிழர்மரபில் தாராசுரத்துக் கோயில் தனித்துவமுடையதாய்த் திகழ்கிறது. இக்கோயிலின் சிற்ப சிறப்புகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திறவுச் சொற்கள்**

மீச்சிறு சிற்பங்கள், சிற்ப அளவைகள், சைவக் குரவர், தூண்சிற்பங்கள், வாயில்கள், மாடங்கள், மண்டபங்கள், இசை சிற்பங்கள்.

**முன்னுரை**

தமிழ்ப் பண்பாட்டின் சுவடுகளில் பின்னோக்கி செல்லும்போது பழந்தமிழகத்தின் வரலாறு புதுப்புது வழித்தடங்களில் பயணிப்பதை உணரலாம். தமிழ்நாட்டின் கலை வளர்ச்சிக்குப் பல்லவர்கள் பெரும் பங்காற்றினர். இவர்களின் காலத்தில் கருங்கல் கட்டுமானங்கள் வளர்ச்சி பெற்று நிலைத்து நிற்க தொடங்கின. இப்பல்லவர்களின் கலைப் பண்பாட்டைச் சோழர்கள் தொடர்ந்து வளைச்சியுறச் செய்தனர். தென்னக வரலாற்றின் பண்பாட்டிற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்பவை சோழர்காலத்துக் கலைபடைப்புகள். இவற்றுள் சோழமரபின் கலைத்துவத்தைப் போற்றும் பெருங்கோயில்கள் என்னும் சிறப்பை மூன்று கற்கோயில்கள் பெற்றுள்ளன.

**தஞ்சை பெருவுடையார் கோயில் – முதலாம் இராசராசன்**

**கங்கை கொண்ட சோழபுரம் – இராசேந்திர சோழன்**

**ஐராவதீஸ்வரர் கோயில் – இரண்டாம் இராசராசன்**

இம்மூன்று கோயில்களின் கட்டுமானங்களும் ஏறக்குறைய ஒன்று போன்ற அமைப்பினை உடையன. ஒவ்வொன்றிற்கும் தனித்துவமான சிறப்புகள் உண்டு. இவற்றுள் தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் சிற்பங்களால் நிறைந்து கலைக்குவியலாகக் காட்சி அளிக்கிறது. இவ் ஐராவதீஸ்வரர் கோயிலின் சிறப்பையும் சிற்ப நுட்பங்களையும் பற்றி பேசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**தாராசுரம்- ஐராவதீஸ்வரர் கோயில் அமைப்பு**

சோழர்களின் கலைத் திறமைக்குச் சான்றாய்த் திகழும் முப்பெருங்கோயில்களுள் தனித்த சிறப்புடையதாய்த் திகழ்வது ஐராவதீஸ்வரர் கோயில். **இராஜராஜபுரம்** என்றழைக்கப்பட்ட தாராசுரத்திலுள்ள இக்கோயில் ஒருகாலத்தில் **இராஜராஜீஸ்வரம்** என்றழைக்கப்பட்டது. **ராராபுரம்** என்று ஒரு காலகட்டம்வரை அழைத்ததாகக் கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. பின்னர் அவ்வழக்கு **தாராசுரம்** என்று அழைக்கலாயிற்று. இக்கோயில் இரண்டாம் இராசராசனால் (1146-1173) கட்டப்பட்டது. தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் அமைந்துள்ள இக்கோயில் சோழர்காலக் கட்டடக் கலைக்கும் சிற்பக்கலைக்கும் சிறந்தவொரு ஆவணமாகத் திகழ்கிறது. காலத்தால் அழியாத நூறாயிரம் சிற்பங்களின் கலைக்கூடமாக ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இந்த அதிசய ஆலயத்தில் மண்டபங்களின் மேல் கூரையிலும், தூண்களிலும் எண்ணற்ற நடனமாடும் சிற்பங்கள் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றன. இத்தலத்தின் சிற்பங்களைப் பார்வையிடுவதற்காகவே தினந்தோறும் ஏராளமான வெளிநாட்டு பயணிகளும், வெளிமாநில பயணிகளும் வருகின்றனர்.

இந்திரனின் வாகனமான ஐராவத யானை, இத்தலத்திலுள்ள இறைவனை வணங்கி சாபம் நீங்கப் பெற்றதால் இக்கோயில் ஐராவதீஸ்வரர் கோயில் என்ற பெயரைப் பெற்றது. ஐந்து நிலை மாடங்களுடன் 80 அடி உயரத்தில் மூலவரின் கருவறை விமானம் அமைந்துள்ளது. கருவறையின் மூன்று ராஜகம்பீர மண்டபமும் மகாமண்டபமும் அமைந்துள்ளன. இம்மண்டபம் தேர் சக்கரங்களோடு ஒருபுறம் யானைகளாலும் மறுபுறம் குதிரைகளாலும் இழுத்துச் செல்வதுபோல் அமைந்துள்ளது. தெய்வநாயகி அம்மனின் திருத்தலம் கோயிலுக்கு வெளியே அமைந்துள்ளது. கோயிலுக்கு உள்ளே நுழைந்ததும் நந்திசிலையும் பலிபீடமும் அமைந்துள்ளன. இந்த பலிப்பீடம் இசைப்படிக்கட்டுகளைக் கொண்டு அமைந்துள்ளது.

**சோழர்களின் கலைத்துவம்**

சோழர்காலத்துக் கலையின் வெற்றியையும் சிறப்பையும் சொல்லக்கூடிய இக்கோயிலின் புறச்சுவர்களில் காணப்படும் சிற்பங்களின் உணர்ச்சி வெளிப்பாடு மிகுந்த அழகியலோடு அமைந்திருக்கின்றது. தாராசுரம் கோயிலின் கோபுரங்கள் மிகச்சிறப்பானவை. கருவறைக்கு மேல் எழுந்து நிற்கக்கூடிய கோபுரங்கள் சிறுசிறு சிகரங்களை அடுக்கி எழுப்பப்பட்ட நுண்மையான கணக்குகளுடன் உருவாக்கப் பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டுதான் நாயக்க மன்னர்கள் விரிவாக்கப் பணிகளைப் பிற்காலத்தில் மிகுதியாக மேற்கொண்டனர் என்பர். இக்கோயிலின் மற்றுமொரு சிறப்பு அக்கோயிலில் அமைந்துள்ள சாளரங்கள். மிக நேர்த்தியாகச் செய்யப்பட்ட சாளரங்கள் பார்ப்பதற்கு பெருவியப்பைத் தருகின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513





கோபுரங்களில் சுதைச் சிற்பங்கள் அமைப்பது சோழர்காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் மென்மேலும் வளர்ச்சியடைந்து கருங்கற்களை அமைப்பதிலும் அவர்கள் சிறந்தோங்கினர். இதனால்தான் ஐராவதீஸ்வரர் கோயில் தமிழகத்தின் **சிற்பக் களஞ்சியம்**, **சிற்பிகளின் கனவு** என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இக்கோயிலைச் சூழ்ந்திருக்கும் சிற்பங்கள் வெளிப்புறச் சுவரிலிருந்து தொடங்கி தூண்கள், படிகள், கோபுரம் என ஒரு குறிப்பிட்ட இடம்கூட விடாமல் அனைத்திலும் ஆர்ப்பரித்து நிற்கின்றன. இவை கண்கொள்ளா கனவுச் சாலைகளாய்க் காண்போரின் உள்ளக்கிடக்கையைத் தூண்டி இன்பம் நல்குவதாய் அமைந்துள்ளன.






இக்கோயிலுள் யானைகளாலும் குதிரைகளாலும் தேர் வடிவ மண்டபம் இழுத்துச் செல்வதுபோல் அமைத்திருப்பது சிற்பக்கலையின் கற்பனைக்குக் கிடைத்த பரிசு என்றே சொல்லலாம். இத்தேரில் உள்ள சக்கரத்தின் அமைப்பு மிகச் சிறப்புடையதாக அமைந்துள்ளது. கொனார்க் கோயிலின் தேர்ச்சக்கர அமைப்பைப் போன்று மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிலும் இக்கோயிலின் மற்றொரு சிறப்பாக யானை, காளை சிற்பம் திகழ்கிறது. யானையின் உடலை மறைத்தால் காளை உருவமும், காளையின் உடலை மறைத்தால் யானை உருவமும் புலப்படுமாறு அமைத்திருப்பது சிற்பக்கலையின் உச்சம் தொட்ட தமிழனுக்கு மகுடம் சூட்டுவதாய் நிமிர்ந்து நிற்கிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513






தமிழகத்தில் மிக பிரமாண்ட முறையில் முழுவதும் கருங்கற்களால் ஆன விமானங்களைக் கொண்ட கோவில்கள் நான்கில் இந்த ஐராவதீச்வரர் கோவிலும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டிய முத்திரைகளைக் காட்டி நிற்கும் சிற்பங்களும், தேர் போன்ற வடிவிலமைந்த மண்டபமும் அரிய, சிறிய, மிகச்சிறிய, சிற்பக்கலைப் படைப்புகளும் இக்கோவில் புகழுக்கு மணிமகுடங்களாகும்.





இந்த ஆலயத்தின் நுழைவுப் பகுதியில் நந்திதேவர் மண்டபத்துடன் அமைந்துள்ள கொடிமரம் அருகில் பலி பீடத்தில் ஏறுவதற்கு உரிய ஏழு படிக்கட்டுக்கள் உள்ளன. அந்தப் படிக்கட்டில் வேறு ஒரு சிறிய கருங்கல்லில் தட்டினால் அந்த படிகளில் சப்த சுரங்களின் நாதம் எழும்புவது அதிசயம். மாடக்கோவிலான இத்தலத்தின் ராஜகம்பீர மண்டபத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு தூண்களிலும் அமையப்பெற்றுள்ள ஒவ்வொரு புடைப்பு சிற்பங்களும் இதிகாச புராண நிகழ்வுகளை நினைவு கூரும். அதில் ஒரு அங்குல நர்த்தன விநாயகர், அம்மையப்பன், கஜசம்ஹார மூர்த்தி சிலை போன்றவை காணும் கண்களை வியக்க வைக்கின்றன.

மேலும் இந்திரனைச் சுமந்த ஐராவதம் என்னும் வெள்ளை யானைகள், சிங்கங்கள் வேட்டையாடுவது போல் அமைந்த யானைகள், அன்னப்பறவை, அன்னப்பட்சி, இரண்டு பாம்புகள் ஒரு எலியைப் பிடிக்கும் காட்சி என்று ஒரே கல்லில் அமைந்த சிற்பங்கள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

அதிகார நந்தி, கண்ணப்பர், யோகசரஸ்வதி, மகாலட்சுமி, கங்காதேவி ஆகிய தெய்வத் திருமேனிகள் இக்கோவிலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன. மூன்று முகங்கள் எட்டுக் கைகளுடன் அர்த்தநாரீஸ்வரர், பார்வதி தேவிசிற்பம் காணத்தகுந்தது. வடக்கு பிரகார திருசுற்று மாளிகையில் அமையப்பெற்றுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிற்பங்கள் யாவும் மிகச்சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

நடன மாந்தர்களின் புடைப்பு சிற்பங்கள் மிக அற்புதமாக உயிர்த்துடிப்புடன் அமைந்துள்ளன. வேறு எங்கும் காண முடியாத புத்தர் வடிவ திருமேனியை வணங்கும் விஷ்ணு, பிரம்மதேவனின் வடிவங்கள் அமைந்துள்ளதும் இங்கு சிறப்பு. மேற்கூரை விதானத்தில் அமைந்துள்ள சதுர, செவ்வக, வட்டம் என பல்வேறு வடிவமைப்புக்குள் பல கற்றளி புடைப்பு சிற்பங்கள் அமைந்துள்ளதைப் போல் வேறு எங்கும் காண முடியாது. குறிப்பாக நூற்றுக்கால் ராஜகம்பீர மண்டபம் அதில் வெளிவாங்கிய சிற்பத் தேர் மண்டபம் ஆகிய மண்டபங்களில் உள்ள தூண்களில் முத்திரை பதித்துள்ள சிற்பங்கள் கண்டவர்களின் நித்திரையிலும் நினைவில் நிற்பவை. இந்தியா தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இங்குள்ள சிற்பங்களைப் பாதுகாத்துப் பராமரித்து வருகிறார்கள். மேலும் மிகவும் பழமையான, மிக நுட்பமான, சிற்பங்கள் பலவற்றைத் தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**மிகச்சிறிய சிற்பங்கள் :**

ஐராதீஸ்வரர் கோயிலின் சிறப்பு என்னவெனில் இக்கோயில் முழுவதும் சிற்பங்கள் குவிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு தூணிலும் சுவரிலும் ஏராளமான கலை நுணுக்க வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள் நிறைந்துள்ளன. மிகச்சிறிய அளவிலான சிற்பங்களில் சில சிற்பங்கள் சென்டிமீட்டர் அளவிலேயே இருக்கின்றன.









நர்த்தன நாட்டியமாடும் கணபதியின் சிற்பத்தை உள்ளங்கைக்குள் அடக்கக் கூடியதான அளவில் அழகிய வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளனர். அதைவிட நுட்பமாக மிகச்சிறிய அளவில் முத்திரை காட்டும் சிற்பங்கள் அமைந்துள்ளன. இச்சசிறு சிற்பங்கள் காண்போரை வியப்பில் ஆழ்த்துகின்றன. உடல் அளவிற்குத் தகுந்தாற் போன்ற முக அமைப்பினையும் இன்ன பிறவற்றையும் சிற்ப இலக்கண நெறிகளின்படி அமைக்கும்போது தான் அச்சிற்பம் சிறப்பாக வரும். இவ்விதிமுறைகள் பிறழாமல் மிகச்சிறிய அளவிலான சிற்பங்களில் மெய்ப்பாட்டு நெறிகளைச் சிறப்போடு இக்கோயிலுள் சிற்பிகள் செதுக்கியுள்ளனர். தமிழ்நாட்டு சிற்ப நூல்களான அகத்தியரின் சகளாதிகாரம், காசியப்பருடைய காசியபம், மயனாருடைய மயமதம், மானசாரருடைய மானசாரரும் சிற்பக்கலை குறித்த இலக்கணங்களைப் பற்றி பேசுகின்றன.



**சமயம் சார்ந்த பதிவுகள்**

சமயக் குரவர்களின் தொண்டு என்பது தமிழகத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உரமூட்டியது எனலாம். மூவேந்த மரபில் சோழ மன்னர்கள் பெரும்பாலும் சைவத்தை வளர்த்தெடுத்தமையும் வரலாறு கண்ட உண்மை. புராணங்களும் சமயம் சார்ந்த கதைகளும் வேரூன்றியிருந்த அக்காலத்தில்

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

அந்நிகழ்வுகளைக் கோயில்களில் பதிவிடும் வழக்கத்தை மிகுதியாக முன்னெடுத்தனர் இதன் விளைவால் அக்கதைகள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. சோழ அரசர்கள் நிறுவிய கோயில்களில் நாயன்மார்களுடைய சிற்பங்கள் இருப்பினும் ஐராதீஸ்வரர் கோயிலில் மட்டுமே அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய சிற்பங்களும் அவர்தம் பதிகக் காட்சிகளும் 95 கற்களில் சிற்பமாக்கப்பட்டுள்ளன எனபது சிறப்பு. தில்லை வாழ் அந்தணரில் தொடங்கி அவிநாசிலிங்க நாயனார் வரைக்கும் அறுபத்து மூன்று நாயன்மாரின் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன .





இராமாயணக் காட்சிகளை நினைவூட்டும் சிற்பங்களும் அழகியலோடு படைக்கப்பட்டுள்ளன. இதுபோல் சமயச் சார்புடைய பல சிற்பங்கள் இக்கோயிலில் வடிவமைக்கப்பட்டுள்ளன. "பக்தி நெறியையும் அதனாலேற் படுவனாகிய மனவுணர்ச்சியினையும் தமிழ்நாட்டுத் திருவுருவங்கள் மிக நயம்பட விலக்கிக் காட்டுவனவாம். உண்மையான பக்தியில் ஈடுபட்டுள்ள ஓர் அடியாரது உள்ளமும் உடலும் எந்நிலையுற்றிக்கு மென்பதைத் தமிழ்நாட்டுப் பக்தர்களுடைய திருவுருவங்கள் செவ்விதின் உணர்த்தும். தெய்வத் திருவுருவங்களாய் உள்ளன வழிபடுவோர் உள்ளத்திற் பக்தியின் நெகிழ்ச்சியை உண்டு பண்ணத்தக்க முறையில்அமைக்கப்பட்டுள்ளன. (ப.117, தென் இந்தியச் சிற்ப வடிவங்கள் ) என்ற கருத்தும் இங்கு குறிக்கத்தக்கது.

குழலோடு சிவனும் , குழலூதும் கண்ணனும் , வில்லோடு இராமனும், வீணையில்லா சரஸ்வதியும் , காளை மீது சிவனும் பார்வதியும், உள்ளங்கை அளவில் விநாயகரும், அறுபத்து மூன்று நாயன்மாரும், கயிலை செல்லும் அப்பரும் , காலணி அணிந்த கண்ணப்பரும் என சமயம் சார்ந்த பதிவுகள் அழகாய்ச் சிற்பங்களாய் வடிவமைக்கப்பட்டுள்ளமை இக்கோயிலின் சிறப்பு .

**பெண் குறித்த பதிவுகள்**

கரகம் ஆடும் பெண், பரதம் ஆடும் பெண், வாளேந்தி சண்டையிடும் பெண், நடன மகளிர், அரச குலப்பெண்கள், பெண் துறவிகள், தாய்மையடைந்த பெண், மகவீனும் பெண், பெண் நாயன்மார், முத்திரை காட்டும் நாட்டிய பெண்கள், தோழியர் கூட்டம், திருமணக் கோலத்தில் உமை என இன்னும் சொல்லிக் கொண்டே போகுமளவிற்கு பெண்கள் பற்றிய சிற்பங்கள் மிகுதியாகக் காணக் கிடைக்கின்றன. பெண்கள் கலைகளில் மட்டுமல்லாது சமூக செயல்பாடுகளிலும் எத்தகைய பங்கு வகித்தனர் என்பதை இக்கோயிலின் சிற்பங்கள் காட்டி நிற்கின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513



**இசையும் நாட்டியமும்**

இசைக்கருவிகளோடு குழுவாகப் பாட்டிசைக்கும் இசைக்குழுவை அழகான சிற்பங்களாக வடித்துள்ளனர் . உடுக்கை, மேளம், புல்லாங்குழல், யாழ் போன்ற இசைக்கருவிகளை வைத்த இசைக்குழுவினரின் சிற்பங்கள் மிகத் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல் இசைப்படிக்கட்டுகளும் சிறப்பானதாக இக்கோயிலில் அமைந்துள்ளன.

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூலுரைநூற் கிடக்கையும்"

என வரூஉம் மணிமேகலை அடிகளால் நாடக மகளிர் ஓவிய செந்நூல்களிலும் தேர்ச்சி உடையவராய் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. அக்காலத்தே ஓவியம், சிற்பம் இரண்டிற்குமான சொல்லாக ஓவியம் என்ற சொல்லாட்சி பயன்பட்டது. அபிநயங்கள் மெய்ப்பாடுகள் தோன்ற ஆடும் நடனத்திற்கு உயிர்க் கொடுக்கும் வகையில் அமைந்த சிற்பங்கள் பெரும்பாலும் ஐராதீஸ்வரர் கோயிலில் காண கிடைக்கின்றன.



" நடனத்திற்கும் சிற்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு பார்ப்பவர்கள் மனதில் ரஸாநுபவம் தோன்றும் பொருட்டு அபிநயங்கள் எவ்வாறு இன்றியமையாச் சாதனங்களாய் இருக்கின்றனவோ , அவ்வாறே அவை சிற்பத்திற்கும் ஓவியத்திற்கும் இன்றியமையாதன வாகின்றன. (ப.83 , தென்னிந்தியச் சிற்பங்கள்).

சிற்பக்கலையில் தேர்ந்தவர்கள் ஒரு நடனமாடும் பெண்ணையோ, ஆணையோ சிற்பமாய் வடிக்க வேண்டுமெனில் நாடக இலக்கணமும், சிற்ப இலக்கணமும் முற்றுமுணர்ந்தால் மட்டுமே மிகச் சிறப்பாக உருவாக்க முடியும். இவ்வாறு தேர்ச்சி பெற்ற சிற்பிகளால் ஐராதீஸ்வரர் கோயிலின் நாட்டிய மகளிரின் முத்திரை காட்சிகள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஒரு நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய நாட்டின் சிறந்த நடிகர்கள் என்று உலகத்தாரால் புகழப்படுகிற உதயசங்கர், நடராஜசாமி, ருக்மணி தேவி , ஸ்ரீமதி, மேனகா இவர்கள் உள்ளிட்ட பலர் தங்களுடைய நாட்டியத்திற்குத் தேவையான உடைகள், அணிகலன்கள் போன்றவற்றைத் தென்னிந்தியப் பகுதிகளில் காணப்படும் ஓவியங்களையும்

சிற்பங்களையும் ஆய்வு செய்து அது போன்று பயன்படுத்தினர் என்று கூறுவர் . அத்தகைய சிறப்பு நம்முடைய முன்னோரின் காலை திறனுக்கு உண்டு என்பது பெருமைக்குரிய ஒன்று. குறிப்பாக ஐராவதீஸ்வரர் கோயில் சிற்ப நடன நுணுக்கங்களைப் பார்த்து ஆய்வு செய்து தங்களுடைய நடனங்களில் பயன்படுத்தினர் என்று செவிவழி செய்தியாகச் சிலர் கூறுகின்றனர்..

**குழல் வழி நின்றது யாழே** என்பர் இளங்கோவடிகள். தாராசுரத்துக் கோயிலில் ஓரிடத்தில் குழலோடு சிவன் நிற்கும் சிற்பம் அழகாக அமைந்துள்ளது. அதேபோல் வீணையோடு சரஸ்வதியும், குழலூதும் கண்ணனும்; குழல் , யாழ் , வீணை , மத்தளம் , பேரிகை , உடுக்கை , தமருகம், தண்ணுமை , முரசு , தாளம் இவற்றை இசைத்துப்பாடும் கலைஞர் பெருமக்களின் சிற்பங்களும் சிறப்பாக அமைந்துள்ளன. சோழர்களுடைய காலத்தில் இசையும் நாட்டியமும் சிறந்தோங்கி இருந்தமையை இவை விளக்கி நிற்கின்றன. எனவேதான் தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் மரபுரிமை சின்னமாக ஐ.நா. சபையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**நிறைவாக**

சிற்பக்கலை என்பது பல்லாயிரம் ஆண்டுகளாய் பெறப்பட்டு வந்த கலையார்ந்த மரபு. சிற்பக்க கலையுடன் சேர்ந்து இசை , நடனம் , ஓவியம் ஆகிய இன்னபிற கலைகளெல்லாம் அழகுணர்ச்சி பெறுகின்றன என்பது பெருமைக்குரியது. மிகப்பெரிய சிற்பங்களிலும் , மிகச்சிறிய சிற்பங்களிலும் அளவீட்டு முறைகளை நெறிப்பட அமைத்துச் சிற்பத் தொழில் நுட்பத்தில் தலை சிறந்தவர்களாய் விளங்கியுள்ளனர் நம் தமிழர் என்பதை ஐராவதீஸ்வரர் கோயில் பறைசாற்றி நிற்கின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

1. தென் இந்தியச் சிற்ப வடிவங்கள், க. நவரத்தினம், குமரன் புத்தக நிலையம்.

2. கோயில் பண்பாடு, சிலம்பு நா. செல்வராசு, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் , அனிச்சம் இலக்கிய வட்டம்.

3. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், எஸ். ஆர். பாலசுப்ரமணியன்,
பாரி நிலையம் , உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.

4. இந்தியக் கலை வரலாறு, சோ.தங்கவேலு, தமிழ்நாட்டு வரலாற்று வெளியீட்டகம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை.